திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

சமய மாத இதழ்
மார்ச் 2020

**ஸப்தகிரி இலவச இணைப்பு**



**கராரவிந்தேன பதாரவிந்தம்,
முகாரவிந்தே வினிவேஸயந்தம் |
வடஸ்ய பத்ரஸ்ய புடே சயானம்,
பாலம் முகுந்தம் மனசா ஸ்மராமி ||**



பிரம்மோத்ஸவத்தில் சிறார் கலைஞர்கள்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



# பால ஸப்தகிரி

"ஸப்தகிரி" இலவச இணைப்பு



## மார்ச் 2020



மலர்–01

இதழ்–01

உள்ளுறை | பக்கம்

பன்னிரு ஆழ்வார்கள் : ஆண்டாள் திருக்கல்யாணம் 04
- திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

கன்னட ஹரிதாஸர்கள் : புரந்தர தாஸர் வைபவம் 06
- திருமதி. எஸ். வைஷ்ணவி, திருப்பதி.

இந்துக்கடவுள்கள் : ஸ்ரீமஹாவிஷ்ணு 08
- முனைவர் பா. முனசாமி, குப்பம்.

சித்திரக்கதை : மண் துளசிதளம் எனில் விருப்பமா! 10
கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்.
சித்திரம் : கலாரத்னா தேவிஜி.

நீதிக்கதைகள் : மேன்மக்கள் மேன்மக்களே! 14
- திரு. சத்தியதாரா, சென்னை.

சிறந்த சிறுவன் : செல்வன் ஹேம வெங்கட் நாராயணா 16

புதிர் : வினா–விடை 17
- திருமதி. வி. உமாராணி, திருப்பதி.

சித்திரம் வரைதல் 18

முன்னட்டை : ஸ்ரீவடபத்ர சாயி (ஆலிலைக் கண்ணன்)
பின்னட்டை : திருவேங்கடமுடையான்



# ஆண்டாள் திருக்கல்யாணம்

இறைவனின் குணங்களில் ஆழ்ந்திருப்பவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். இவர்கள் பன்னிருவர் ஆவர். இவர்கள் தங்களுடைய தமிழ் பாசுரங்களால் திருமாலின் சிறப்புகளையும், பெருமைகளையும் போற்றிப் பாடினர். இவர்களைப் பற்றி அறிமுகப்படுத்துவதே "பன்னிரு ஆழ்வார்கள்" தொடரின் சிறப்பு அம்சமாகும்.



*- திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*

**கோ**தை பள்ளிக்கூடத்தை விட்டு வீட்டுக்கு வந்தாள். வந்தவுடன் தாத்தாவிடம் கேட்டாள்.

"தாத்தா தாத்தா அடுத்த வாரம் எங்க பள்ளிக்கூடத்துல ஒரு நாட்டிய நாடகம் நடத்தப் போறாங்க".

தாத்தா கேட்டார். "என்ன தலைப்பும்மா?"

கோதை சொன்னாள். "ஆண்டாள் திருக்கல்யாணம் தாத்தா".

"அற்புதமான கதை. நானும் வரலாமா?"

"வரலாம் தாத்தா. ஆண்டாளைப் பற்றிய நாடகத்துக்கு எல்லாரையும் அழைச்சிட்டு வரச் சொல்லி ஆசிரியர் சொல்லி இருக்கிறார்"

"ரொம்ப சந்தோஷம்மா கட்டாயம் வர்ரேன்மா..."

"ஆனா அதுக்கு முன்னாடி ஆண்டாளைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்க தாத்தா"

தாத்தா ஆரம்பித்தார்.

"ஆண்டாள் ஆழ்வார்களில் ஒருவர். பகவானை எண்ணி பாசுரங்கள் பாடியவர்கள் ஆழ்வார்கள். அவர்கள் 12 பேர். அவர்களில் ஒருவர்தான் ஆண்டாள். பெரியாழ்வாரின் திருமகள்."

"பெரியாழ்வாரும் ஆழ்வார் தானே தாத்தா. அப்புறம் அவருடைய பெண் ஆண்டாளும் ஆழ்வாரா?"

தாத்தா சிரித்துக் கொண்டே சொன்னார். "நல்ல கேள்விம்மா. பெரியாழ்வாரும் ஆழ்வார். அவருடைய செல்வ மகளும் பூமித்தாயின் அம்சமுமான ஆண்டாளும் ஆழ்வார்."

"ம் சரி தாத்தா ஆண்டாள் யாரை கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க?"

“பகவான் ஸ்ரீரங்கநாதரைத் தான்...”

“ஸ்ரீரங்கத்தில் இருக்கிறாரே அவரையா?”

“அவரையே தான்”

“அவர் கடவுள் ஆச்சே தாத்தா... அவரைக் கல்யாணம் பண்ணிக்க முடியுமா தாத்தா?”

“நம்மை போன்ற சாதாரண மக்களால் வேண்டுமென்றால் அது முடியாமல் இருக்கும். ஆண்டாளைப் போல பக்தியும் உறுதியும் இருக்குறவங்களால எதுதான் முடியாது? வைராக்கியத்தோடு அவரையே கல்யாணம் பண்ணிக் கொண்டாள்.”

“ஏன் தாத்தா? ஆண்டாளுக்கு பகவான் ஸ்ரீரங்கநாதர் கிட்ட எப்படி ஆசை வந்தது?”

“பெரியாழ்வாருக்கு குழந்தை இல்லை. நந்தவனத்திலே ஆடிப்பூரம் அன்னிக்கு துளசிசெடி அருகே குழந்தையா இருந்த ஆண்டாளை வளர்த்தவர் அவர். குழந்தையாக வளரும் பொழுதே கண்ணனுடைய கதைகளாகச் சொல்லிச் சொல்லி வளர்த்தார். அந்த கதைகள் எல்லாமே பாகவதக் கதைகள். அந்த கதைகள் எல்லாமே ஆண்டாள் மனதைக் கவர்ந்தது. கண்ணனைப் பற்றிய ஆழமான பக்தி உருவாகி விட்டது. கண்ணனோடு தான் வாழ வேண்டும். கண்ணன் தான் நமக்கு கணவனாக அமைய வேண்டும் என்று சின்ன வயதிலேயே அவளுக்கு உறுதி வந்து விட்டது. அவரையே நம்பினாள். நம்பிக்கை வீண் போகுமா? இவளுடைய பக்திக்கு இரங்கி வந்து கல்யாணம் பண்ணிக் கொண்டார் பெருமாள்.”

“சூடிக்கொடுத்த சுடர்க்கொடி அப்படின்னு சொல்றாங்களே தாத்தா?”

“ஆமாம் அம்மா. சின்ன வயதிலேயே தன்னுடைய கண்ணனுக்கு இந்த மாலை நல்ல இருக்குமா என்று, தான் முதலில் போட்டுக் கொண்டு, பிறகு கண்ணனுக்கு சூட்டினாள். அந்தச் செயல் பகவானாகிய கண்ணனைக் கவர்ந்தது. பக்தியோடு எதைச் செய்தாலும் கண்ணன் விரும்புவான் அல்லவா! அப்படி நமக்காக இவள் போட்டுக் கொண்டு மாலையை கொடுக்கிறாளே என்று ஏற்றுக் கொண்டான். ஆகையினாலே ஆண்டாளுக்கு சூடிக் கொடுத்த சுடர்க்கொடின்னு பேர். புரிஞ்சுதா அம்மா!

“நல்லா புரிஞ்சது தாத்தா”

“ஆண்டாள் திருக்கல்யாணம் நாட்டிய நாடகம் பார்க்கும்பொழுது இன்னும் பல செய்திகள் தெரியும்”





# புரந்தரதாஸர் வைபவம்

– திருமதி. எஸ். வைஷ்ணவி, திருப்பதி

தமிழகத்தில் ஆழ்வார்களைப் போன்று கன்னடத்தில் ஹரிதாசர்கள் சிறப்புற்றுத் திகழ்ந்தனர். இவர்களை குறித்து இன்றைய சிறார்கள் அறிந்து கொள்வதற்காக “கன்னட ஹரிதாசர்கள்” எனும் தொடர் துவங்கியுள்ளோம்.


வரதப்ப நாயக்கர் என்ற பிராம்மண வியாபாரிக்கு மகனாகப் பிறந்தவர் ஸ்ரீநிவாச நாயக்கர். சிறு வயதிலிருந்தே ஸ்ரீநிவாச நாயக்கரின் வயதிற்கு மீறிய ஞானத்தையும், தந்தையின் வியாபார இரகசியங்களையும் கற்றுத் தேர்ந்த விதத்தையும் எல்லோரும் பாராட்டினர். அவர் தெய்வ பக்தியும், பெரியவர்களிடம் மரியாதையும் உள்ள சரஸ்வதிபாய் என்கிற அழகிய பெண்ணை மணம் புரிந்தார். தனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு அவ்வியாபார பொறுப்பினை ஏற்ற ஸ்ரீநிவாச நாயக்கர் மிகவும் கடுமையாக நடந்துக் கொண்டார். வட்டி வியாபாரம் கூட செய்து கொண்டு வந்தார்.

இவரை திருத்துவதற்காக ஸ்ரீஹரி ஓர் ஏழை அந்தணராக வடிவெடுத்து, ஸ்ரீநிவாச நாயக்கரிடம் தன்னுடைய மகனுக்கு உபநயனம் செய்வதற்கு நிதியுதவி வேண்டி நின்றார். ஸ்ரீநிவாச நாயக்கரும் நாளை தருகிறேன் என்று சொல்லி சொல்லி நாட்களை கடத்தினார். இதனால் வெறுப்புற்ற அந்த அந்தணர் ஸ்ரீநிவாச நாயக்கரின் மனைவியிடம் சென்று நடந்ததைக் கூறினார். அன்பே உருவான அவள் தன்னுடைய விலைமதிக்க முடியாத வைர மூக் குத்தியை கழற்றி கொடுத்து உதவி னாள். அதை பெற்றுக் கொண்டு அந்தணரான எம்பெருமான் ஸ்ரீநிவாச நாயக் கரிடம் சென்றார். என்னிடம் விலைமதிக்க முடியாத மூக்குத்தி இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு எனக்கு பணம் தாருங்கள் என்று கூறினார்.

ஸ்ரீநிவாச நாயக்கரும் சரி என்று அந்த மூக்குத்தியை வாங்கி பரிசோதிக்க, அது தன்னுடைய மனைவியுடைய மூக்குத்திபோல் இருப்பதை அறிந்தார். அதனால் கொஞ்ச நேரம் உட்காருங்கள் நான் வருகிறேன் என்று கூறிவிட்டு, தன்

வீட்டிற்குச் சென்ற ஸ்ரீநிவாச நாயக்கர், தன் மனைவியை கோபமாக அழைத்து, “உன்னுடைய மூக்குத்தியை உடனே கொண்டு வா” என்றார். அவருடைய கோபமான குரலைக் கேட்ட சரஸ்வதி ஸ்ரீஹரியிடம் என்னை இப்பொழுது காப்பாற்றுங்கள் ஸ்வாமி என்று பலவாறு மனமுருக வேண்டினாள். ஸ்ரீஹரியும் மூக்குத்தியை அவளிடம் அளித்தார்.

அவளும் மூக்குத்தியை தன் கணவரிடம் சென்று காட்டினாள். ஸ்ரீநிவாச நாயக்கர் தன் கடையில் இருந்து எடுத்து வந்த மூக்குத்தியை இதனோடு ஒப்பிட்டு பார்க்க எண்ணி பெட்டியை திறந்தார். அதில் மூக்குத்தி இல்லை. இது எல்லாம் எவ்வாறு நடந்தது என்று குழம்பினார். அதைப் பார்த்த சரஸ்வதி பாய் தன்னிடம் அந்த அந்தணர் கேட்ட விவரத்தையும், தான் அவருக்கு உதவ எண்ணி தன்னுடைய மூக்குத்தியை கொடுத்தது பற்றியும் கூறினாள். இப்பொழுது நீங்கள் கேட்டவுடன் ஸ்ரீஹரியை வேண்டினேன். ஸ்ரீஹரியான பாண்டு ரங்கனே இம்மூக்குத்தியை அளித்தார். அவள் கூறியதை கேட்டவுடன் தன் கடைக்குச் சென்று பார்த்தார். அங்கே அந்த அந்தணர் இல்லை. தன் கண் முன்னே இருந்த எம்பெருமானை அறிந்து கொள்ள முடியவில்லையே என வருந்தினார். ஸ்வாமி ஜகத்ரக்ஷகா, ஸ்ரீநிவாசா, பாண்டுரங்கா, சர்வேஸ்வரனே என் கண் முன்னே நின்றிருந்த உன்னை கண்டு கொள்ளாமல் பல மாதங்களாக கஷ்டப்படுத்தினேன். கண் முன்னே நின்ற உன்னை பார்க்கும் பாக்கியம் எனக்கு இல்லாமல் போய் விட்டது என மனம் வருந்தினார்.




தன்னிடமிருந்த தனத்தை எல்லாம் தான தருமங்கள் செய்து விட்டு, தம் பூராவை மீட்டி, ஸ்ரீஹரியின் மீது பல கீர்த்தனைகளை இயற்றி எம்பெருமானிடம் சரணடைந்தார். வியாசராஜ ஸ்வாமிகள் அவருக்கு தீக்ஷை கொடுத்து, புரந்தர தாசர் என்ற பட்டத்தினை வழங்கினார். திருமலை திருப்பதி தேவஸ்தானம் புரந்தரதாஸரின் நினைவாக “தாஸ சாஹித்ய திட்டம்” ஒன்றை ஏற்படுத்தி அவருடைய கீர்த்தனைகள் பல வெளியிட்டு கௌரவப்படுத்தி உள்ளது.



இந்துக்கடவுள்கள்

# மஹாவிஷ்ணு

– முனைவர் பா. முனசாமி,
குப்பம்.


பகவானின் அருளால் தான் நமக்கு மகிழ்ச்சி கிடைக்கின்றது. அந்த பகவானின் சிறப்புகளை ஒவ்வொரு மாதமும் “இந்துக்கடவுள்கள்” எனும் தொடர் மூலமாக தெரிந்து கொள் வோம் குழந்தைகளே...

“விஷ்ணு” என்ற சொல்லுக்கு எங்கும் நிறைந்திருப்பவர் என்று பொருள்படும். விஷ்ணு பகவான் மும்மூர்த்திகளில் ஒருவராகவும், காக்கும் கடவுளாகவும் அனைவராலும் வணங்கப்படுகிறார். அந்த மகாவிஷ்ணு ஐந்து நிலைகளில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அவை பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை ஆகும். பரம் என்பது விண்ணாட்டு நிலை. வியூகம் என்பது திருப்பற்கடலில் பள்ளி கொண்டிருப்பது. விபவம் என்பது இராமகிருஷ்ண அவதா ரங்களான பிறப்பு நிலை, அந்தர்யாமி என்பது எல்லா உயிர்களிலும் உறைந்து இருப்பது. அர்ச்சை என்பது ஆலயங்களில் சிலை வடிவில் கொலுவீற்றிருப்பது. மகாவிஷ்ணு விண்ணுலகான வைகுண்டத்திலே வீற்றிருந்து பரவாசுதேவனாகக் காட்சியளிக் கிறார். பாற்கடலிலே பள்ளி கொண்டு பரந்தாமனாக விளங்குகின் றார். இப்பூவுலகில் அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் தர்மத்தைக் காக்க பல அவதாரங்களை மேற்கொள்கிறார். அனைத் துயிர்களும் நானே என்பதை பகவத்கீதையில் விஸ்வரூப தரிசனம் மூலமாகக் காட்டுகின்றார். கண்டு பற்றுகைக்கு சௌலப்யம் என்னுமாபோலே எளி வந்த தன்மையில் இக்கலியுகத்தில் சிலை

வடிவில் நம் கண்களுக்குக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றார். எங்கும் வீற்றிருக்கும் அந்த பரம்பொருளான மஹாவிஷ்ணுவே உலக படைப்புக்கும் காரணமாக விளங்குகின்றார். ஆதிசங்கரர் தம் பஜகோவிந்தத்தில் ***''கேயம் கீதா நாம ஸஹஸ்ரம் த்யேயம் ஸ்ரீபதி ரூபமஜஸ்ரம்''*** என்று கூறுகின்றார்.

வேதங்களனைத்தும் விஷ்ணு மயம், ஊர்த்துவலோகம், அறிவியலும் விஷ்ணுமயமே. உலகம் யாவும் விஷ்ணுமயமேயா கும். அனைவராலும் அறிந்து கொள்ளப்படுபவரே விஷ்ணுவா வார். பீஷ்மாசாரியர் விஷ்ணுவை போற்றி விஷ்ணு சகஸ்ர நாமத்தை இயற்றியும் உள்ளார்.

உலகைக் காப்பவராகத் திகழும் அந்த பரம்பொருளான மஹாவிஷ்ணு நீலநிறத்துடனும், கீழ் வலது கையில் கௌமோதகி யும், கீழ் இடது கையில் தாமரையும், மேல் வலது கையில் சுதர்சன சக்கரமும், மேல் இடது கையில் பாஞ்சசன்யம் எனும் சங்கையும் கொண்டு காட்சியளிக்கின்றார். கறந்த பாலில் நெய் இருப்பதை போல இவரும் எங்கும் எதிலும் பரந்து வீற்றிருக்கின்றார். இப்பேற் பட்ட பல பெருமைகளைக் கொண்ட ஸ்ரீமஹாவிஷ்ணு இக் கலியுக மக்களைக் காக்க கலியுகத் தில் கண்கண்ட தெய்வமாக திரு மலையில் திருவேங்கடவனாக அர்ச்சை வடிவில் எழுந்தருளி தன்னை நாடி வரும் பக்தர்களைக் காத்து அருள் புரிந்து வருகின்றார்.





# மண் துளசிதளம் எனில் விருப்பமா!

சித்திரக்கதை

கதை :
திரு. டி. ஶ்ரீநிவாச தீக்ஷிதுலு
தமிழாக்கம் :
திரு. வ.ஓ.சுரேஷ்
சித்திரம் :
கலாரத்னா தேவிஜி

சேஷாசலத்தின் வடக்கில் குருவபுரம் எனும் சிறு கிராமம் உளது. அங்கு பீமன் எனும் ஏழை குயவன் வசித்து வந்தான். திருவேங்கடமுடையானின் மடைப்பள்ளிக்குத் தேவையான பானைகளைத் தயார் செய்து, பக்தியுடன் சமர்ப்பிப்பது பீமனின் அன்றாட செயலாகும். ஒரு நாள்...











பீமன் மலைக்குச் செல்ல முடியாததால் ஸ்வாமியின் உருவை மண்ணால் தயாரித்து, துளசி தளங்களையும் மண்ணால் தயாரித்து, அவற்றினால் ஸ்வாமியை பூஜித்து திருப்தி அடைந்தான். அவனுடைய மனைவி தமாலி அவனுக்கு அனைத்து வகையிலும் உதவி புரிந்தாள், தடையின்றி பானைகளை பீமன் செய்து கொண்டே இருந்தான்





அப்பகுதியை ஆட்சி புரியும் தொண்டைமான் சக்கரவர்த்தி ஆனந்த நிலையத்தில் ஸ்வாமியின் அனுக்கிரகத்திற்காக தினமும் தங்க துளசி தளங்களால் பூஜை செய்து வந்தார்.
ஒரு நாள் சக்கரவர்த்தி சமர்ப்பித்த தங்க துளசி தளங்கள் பக்கமாக விலகிச் செல்ல, மண்ணால் செய்த துளசி தளங்கள் ஸ்வாமி திருவடிக்கு வந்து சேர்ந்தன. அரசன் ஆச்சரியமடைந்தான்...




8
ஸ்வாமி! யார் அந்த பக்தன் ?
பீமன் எனும் குயவன். என்னுடைய பரம பக்தன்!
நொடிப் பொழுதில் சக்கரவர்த்தியின் அகங்காரம் தொலைந்தது. விவேகம் ஏற்பட்டது... பணிவு வந்து சேர்ந்தது.
9
ஸ்வாமி! அந்த மகா பக்தனை எனக்கு காண்பிக்கின்றீரா?
தவறாமல் காண்பிக் கின்றேன் வா!...
ஸ்வாமியுடன் சேர்ந்து தொண்டைமான் குருவபுரத்திற்குச் சென்றான். அங்கு பீமன் அவனுடைய மனைவி, பரமானந்தம் கொண்டனர்.
10
ஸ்வாமி! தங்களை வணங்குகிறோம்! யாம் மண் மனிஷர்கள். எமக்கு பக்தி, பூஜை இது எதுவும் தெரியாது! உமக்கு தகுந்தபடி யாதும் செய்திலோம்!
பீமா! நிர்மலமற்ற உன் வார்த்தைகள் எனக்கு பிடித்தவை. நீ என் பரமபக்தன். நீ அளிக்கும் மண்தளங்களே என் ஆனந்த நிலையத்தை வந்து சேர்கின்றன
11
தமாலி! எனக்கு மிகவும் பசியாக உள்ளது. உண்ண ஏதாவது தருவாயா?
நொடிப் பொழுதில் ஸ்வாமி...
உடனே புதுப்பானையில் சீம்பாலில் தயாரித்த களியை ஸ்வாமிக்கு தமாலி அளித்தாள்
12
இது மிகவும் ருசியாக இருக்கிறது. உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள்
உங்கள் தரிசனம் கிடைத்தது! எங்களுக்கு அதுவே போதும்!




தேவலோகத்திலிருந்து திவ்ய விமானம் அழகாக கீழே இறங்கி, அந்த தம்பதிகள் முன்பு வந்து நின்றது. அந்த தம்பதிகள் மிகவும் சந்தோஷமாக, ஆச்சரியமாக திகைத்துப் போய் நின்றனர். திருவேங்கடமுடையானை வணங்கி, குருவ நம்பியாக புகழ் பெற்ற பீமன் தன் மனைவி தமாலியோடு சேர்ந்து அந்த திவ்ய விமானத்தில் ஏறி திருவைகுண்டத்தை அடைந்தான்.




அடுத்த இதழில் திருவேங்கடமுடையானின் மற்றொரு திவ்ய லீலையை தரிசிப்போம்.

முற்றும்.

நீதிக்கதைகள்

# மேன்மக்கள் மேன்மக்களே!



# மூதுரை கதை

– திரு. சத்யதாரா, சென்னை.

''அட்டாலும் பால்சுவையிற்
குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் -
நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள்
மேன் மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்''

பொருள் : நெருப்பில் இட்டு காய்ச்சினாலும், பாலின் சுவை குறையவே குறையாது. அதுபோல் வெண்மையான சங்கினை எவ்வளவு சுட்டாலும், வெண்மை நிறத்தையே கொண்டு இருக்கும். அதுபோலவே மேன்மக்கள் துன்பம் வந்தபோதும் தங்களுடைய உயர்ந்த பண்பில் இருந்து வழுவ மாட்டார்கள். இந்த கருத்தினை ஒரு சிறு கதை மூலம் காண்போம்.

கிராமத்தில் குளத்தின் அருகில் ஒரு பெருமாள் கோவில். பட்டர் ஸ்வாமிகள் நெறி தவறாமல் வாழும், கடமை உணர்ச்சியுடன் பெருமாள் கோவிலில் கைங்கர்யம் செய்து வந்த ஒரு உத்தமராவார். ஒரு நாள் பெருமாளுக்கு தீர்த்தம் எடுக்க குளக்கரையில் இறங்குகிறார். படியில் நின்று குடத்தை முகந்து தீர்த்தத்தினை நிரப்புகிறார். அப்போது விஷக்கொடுக்குள்ள ஒரு தேள். தண்ணீரில் விழுந்து தத்தளிக்கிறது.

ஆலய பட்டர் குடத்தினை இறக்கிவிட்டு, அந்த தேளினை தண்ணீரில் இருந்து எடுத்து கரையில் விடுகிறார். அவர் கையில் எடுக்கும் சமயத்தில், அந்த தேள் அவரை ஒரு விரலில் கொட்டி விடுகிறது. வலியில் கையை உதற மீண்டும் அந்த தேள் தண்ணீரில் விழுந்து தத்தளிக்கிறது. ஆலய பட்டரின் மனமும் தத்தளிக்கிறது. வலிக்கிறது. தண்ணீரில் தவிக்கும் ஜீவனை காப்பாற்றுவது தனது

கடமை, என்று உணர்ந்து மீண்டும் அந்த தேளினை குளத்தில் இருந்து மேலே எடுத்து காப்பாற்றுகிறார். மீண்டும் அவரின் மற்றொரு விரலில் அந்த தேள் கொட்டியது. அவரும் வலியால் கையை உதற, தேள் குளத்தில் விழுந்து தவிக்கிறது. மீண்டும் கைகளில் துடிக்கும் வலி. மூன்றாவது முயற்சியும் அவ்வாறே ஆயிற்று. நான்காவது முறையாக அதனை தண்ணீரில் இருந்து வெளியே எடுக்கிறார். மூன்று முறை கொட்டியதால் அதன் கொடுக்கின் முனை முழுங்கி விடுகிறது? தேளின் ஆட்டம் நின்று விடுகிறது.

அதற்குள் அங்கிருந்தோர் தேள் கொட்டும் எனத் தெரிந்தும் அதனை ஏன் காப்பாற்றுகிறீர்கள் எனக் கேட்டனர். அதற்கு, தேள் கொட்டுவது அதன் பிறவிக்குணம். அது மாறாது. உயிருக்கு துடிக்கும் ஜீவன்களை காப்பாற்றுவது என்னுடைய பிறவிக்குணம். அதனை என்னால் மாற்றிக் கொள்ள இயலாது. உயிர் எதுவாக இருந்தாலும் துன்பத்தில் இருக்கும் போது உதவி செய்ய வேண்டியது மனிதராக பிறந்த ஒவ்வொருவரின் கடமை அல்லவா? இது போன்ற தொண்டு களும் இறைவனுக்கு செய்த தொண்டு என்று விளக்குகிறார். ஆலயத் தில் இருந்த பெருமாளின் அனுகிரகத்தால் அவரது விரல்களில் இருந்த வலியும் துன்பமும் மறைந்தே போய் விட்டது.

குழந்தைகளே! அன்புச் செல்வங்களே! அடுத்தவருக்கு உதவிடும் வழியில் நமது மனத்தை பழக்கிக்கொண்டு விட்டால்... அந்த எண்ணம் நம்மோடு ஒன்றி விடும். மாறவே மாறாது... இதை உணர்த்து வதுதான் மேலே உள்ள ஔவையா ரின் பாடல்.





# சிறந்த சிறுவன்

திருப்பதியைச் சேர்ந்த திரு. பி. நாகேஷ்வர் திருமதி பத்மாவதி தம்பதியரின் மகன் (ஒன்பதாம் வகுப்பு) "செல்வன் ஹேம வெங்கட் நாராயணா". பகவத்கீதை சுலோகங்களை அற்புதமாகவும், சரளமாகவும் பாடி, ஆன்மீக பண்டிதர்களையும் வியப்பில் ஆழ்த்துகின்றான். விஷ்ணு சஹஸ்ரநாமத்தை தங்குதடையின்றி நிறுத்தாமல் கூறுகின்றான். இச்சிறுவனின் திறமைக்கு எத்தனையோ விருதுகளும் கிடைத்துள்ளன.

**திறமைக்கான பரிசுகள் :**

- **2012ல் வர்ட்ஸ் வர்த் இன்டர்நேஷனல்யினர் நடத்திய ஸ்பெல்லிங் பி போட்டியில் முதல் பரிசு**
- **2012ல் பிரச்சார பாரதியினர் விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணத்தை பதிவு செய்து, பிரச்சாரம் செய்து பாராட்டினர்.**
- **2012ல் வேதப் பல்கலைக்கழகம் நடத்திய பகவத்கீதை சுலோகப் போட்டியில் முதல் பரிசு.**
- **2013ல் சமஸ்க்ருத பாரதியினர் நடத்திய பகவத்கீதை ஒப்புவிக்கும் தேர்வில் முதல் பரிசு.**
- **2013ல் ஸ்ரீவேங்கடேஸ்வரா வேதப் பல்கலைக் கழகத்தினர் சமஸ்கிருத தின விழாவின் போது நடத்திய பகவத் கீதை சுலோகப் போட்டியில் இரண்டாம் பரிசு.**
- **2013ல் ஸ்ரீகிருஷ்ண ஜென்மாஷ்டமியை முன்னிட்டு இஸ்கானில் நடைபெற்ற ஓவியம் வரைதல் போட்டியில் முதல் பரிசு.**
- **2016ல் ராஜமுந்திரியில் கண்டசால ஆராதனை உத்ஸவத்தில் தன் திறமையை வெளிப்படுத்தினான்.**
- **2014-2018 வரை ஒவ்வொரு வருடமும் ஸ்ரீகிருஷ்ணாஷ்டமி, கீதா ஜெயந்தியை முன்னிட்டு இஸ்கான் நடத்திய போட்டிகளில் முதல் பரிசு.**
- **07-12-2019 ஆம் தேதி அன்று எச்.டி.பி.பி., தி.தி.தே. மற்றும் இஸ்கான் இணைந்து திருப்பதியில் நடத்திய கீதா ஜெயந்தி உத்ஸவத்தில் எச்.டி.பி.பி. செயலாளர் திருக்கரங்களால் முதற்பரிசினைப் பெற்றுக் கொண்டான்.**
- **07-12-2019 அன்று சின்மயா மிஷனில் மாவட்ட அளவிலிருந்து மாநில அளவிற்கு தகுதிப் பெற்றான்.**

புதிர்

# "வினா–விடை"

**நம் இந்து மத கலச்சாரத்தின் வாரிசுகளான சிறார்களுக்கு புராணம், இதிகாசம் மற்றும் காவியங்கள் குறித்த பொது அறிவினை வளர்ப்பதற்காக ஒவ்வொரு மாதமும் புதிர் "வினா–விடை" பகுதியை வழங்குகின்றோம்.**

1. திருமலையில் முதலில் தரிசிக்க வேண்டிய ஸ்வாமி யார்?

   அ) வேங்கடவன் ஆ) வராஹர்

   இ) வாமனன் ஈ) வாசுதேவன்

2. சத்தியவதி சாவித்திரியின் கணவன் யார்?

   அ) சத்திய விரதன் ஆ) சத்தியவந்தன்

   இ) சத்திய கீர்த்தி ஈ) சத்திய மூர்த்தி

3. சகுந்தலையின் வளர்ப்பு தந்தை யார்?

   அ) கண்வ மஹரிஷி ஆ) மிருகண்ட மஹரிஷி

   இ) பிருகு மஹரிஷி ஈ) அத்ரி மஹரிஷி

4. மஹாபாரதத்தில் உள்ள பருவங்கள் எத்தனை?

   அ) 11 ஆ) 12 இ) 18 ஈ) 28

5. பத்மாவதி தாயார் தோன்றிய திருத்தலம் எது?

   அ) ஸ்ரீநிவாச மங்காபுரம் ஆ) அலர்மேல் மங்காபுரம்

   இ) நாராயணவனம் ஈ) நாகுலாபுரம்

6) ஆமுக்த மால்யதா நூலை இயற்றியவர் யார்?

   அ) மகாகவி காளிதாஸ் ஆ)கிருஷ்ண தேவராயர்

   இ) போஜ ராஜு ஈ) தியாகராஜு

7) திருமலையப்ப ஸ்வாமிக்கு முத்யால ஹாரதியை துவக்கியவர் யார்?

   அ)அன்னமய்யா ஆ) பெரிய திருமலைய்யா

   இ) தாள்ளபாக்க திம்மக்கா ஈ)தரிகொண்ட வெங்கமாம்பா


*திருமதி. வி. உமாராணி, திருப்பதி*



1) ஆ, 2) ஆ, 3) அ, 4) இ, 5) ஆ, 6) ஆ, 7) ஈ

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
குழந்தைபக்தன்...



உலகமுண்டபெருவாயா!
உலப்பில்கீர்த்தியம்மானே!
நிலவும்சுடர்சூழொளிமூர்த்தி!
நெடியாய்! அடியேனாருயிரே!
திலதமுலகுக்காய்நின்ற
திருவேங்கடத்து எம்பெருமானே!
குலதொல்லடியேன்
உனபாதம் கூடுமாறுகூறாயே.

– நம்மாழ்வார்